
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1090**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# திராவிட மாடல் அரசு

**நீரை.மகேந்திரன்**

**155**

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நம் முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

# மாவீரன் பொல்லான் அரங்கம்!

## தமிழ் வீர வரலாற்றைப் போற்றும் அரசு!

தமிழ்நாட்டில், மொழி வளர்ச்சிக்கும், இன உணர்வுக்கும் பாடுபட்ட, பெருமை தேடித்தந்த அறிஞர்களுக்கு ஆளுமைகளுக்குத் தேடித்தேடி பெருமை செய்து கொண்டிருக்கிறது திராவிட மாடல் அரசு. செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், நினைவகங்கள், திருவுருவச் சிலைகள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள் ஆகியவை அமைக்கப்பட்டு, அவர்களின் நினைவுகளை மக்கள்மயமாக்கி வருகிறது, திராவிட மாடல் அரசு.

அந்தவகையில், சுதந்திரப் போராட்டக் களத்தில் இன்னுயிர் ஈந்த, தங்களது சொத்து சுகங்களை இழந்த தியாகிகளைப் பெருமைப்படுத்தும் வகையில், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. அவர்களுக்கு காந்தி மண்டபத்தில் மார்பளவு சிலை, வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு திருவுருவச் சிலை, மருது சகோதரர்கள் மற்றும் வீரமங்கை வேலு நாச்சியார் ஆகியோருக்கு திருவுருவச் சிலை, மூவலூர் இராமாமிர்தம் அம்மையாருக்கு திருவுருவச் சிலை எனப் பல்வேறு தியாகிகளுக்குச் சிலைகளை நிறுவி, மணிமண்டபங்கள் அமைத்து, அவர்களின் நினைவுகளைப் போற்றி வருகிறது நம் அரசு. அதன் தொடர்ச்சியாக, வீர மறவராக வரலாற்றில் இடம்பெற்றுள்ள, சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் திருவுருவச் சிலையுடன்கூடிய அரங்கத்தைத் திறந்து வைத்து பெருமை செய்துள்ளது திராவிட மாடல் அரசு.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 26-ஆம் தேதி ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்த அரங்கத்தை திறந்து வைத்து சிறப்பு செய்தார் நம் முதலமைச்சர் திராவிட மாடல் நாயகர்.

### மாவீரன் பொல்லான்

ஈரோடு மாவட்டம், அறச்சலூர் அருகே உள்ள நல்லமங்காபாளையம் கிராமத்தில் பிறந்தவர் பொல்லான். சிறுவயதிலிருந்தே வாள், வில், மற்போரில் சிறந்த முறையில் பயிற்சிகள் பெற்றவர். பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கிலேயரின் அத்துமீறலுக்கு எதிராகப் போர்புரிந்த தீரன் சின்னமலையின் போர்ப்படையிலும், ஒற்றர் படையிலும் தளபதியாகத் திகழ்ந்தவர். வெள்ளையர் படையை எதிர்த்து, 1801-இல் நடைபெற்ற பவானி போர், 1802-இல் நடைபெற்ற ஓடாநிலை போர், 1803-இல் அறச்சலூர் போர் என மூன்று போர்முனைகளில் பெற்ற வெற்றிகளுக்குக் காரணமாக இருந்தவர். அதனால், ஆங்கிலேயர்களின் கோபத்துக்கு ஆளான மாவீரன் பொல்லான், ஆங்கிலப் படைத் தளபதி கர்னல் ஹாரிஸ் என்பவரால், ஓடாநிலை கோட்டைக்கு அருகில், ஜெயராமபுரத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.





சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்ன மலையின் நம்பிக்கைக்குரிய படைத்தளபதி, மாவீரன் பொல்லான் அவர்களின் நினைவினைப் போற்றும் வகையில், அவர் சுட்டுக்கொல்லப்பட்ட இடத்தில் அவரது திருவுருவச் சிலையை அமைக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

கழகத் தலைவர் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, 2019-ஆம் ஆண்டில் மகுடஞ்சாவடியில் நடைபெற்ற ஆதித்தமிழர் பேரவையின் வெள்ளிவிழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார். அப்போது, அவரிடம் விழாக்குழுவினர் வைத்த கோரிக்கைகளில், மாவீரன் பொல்லான் அவர்களுக்கு சிலையும் மணிமண்டபமும் அமைக்க வேண்டும் என்பதும் ஒன்று. கழகத்தின் ஆட்சியில் அதை நிறைவேற்றித் தருவோம் என அந்த மேடையிலேயே அறிவித்தார் கழகத் தலைவர்.

அதேநேரத்தில், கடந்த ஆட்சியில் நல்லமங்காபாளையம் ஊர் பொதுமக்கள் சார்பில், மாவீரன் பொல்லான் நினைவுச் சின்னம் கட்டப்பட்டபோது, அதை அகற்றியது அன்றைய அரசு. மக்களின் பலகட்ட போராட்டங்களுக்குப் பின்னர், ஒரு கோடியே 82 லட்சம் மதிப்பீட்டில் மணிமண்டபம் கட்டப்படும் என அவசர கதியில், அரசாணை வெளியிடப்பட்டது. அப்போதும் நிலம் கையகப்படுத்துதல் உள்ளிட்ட பணிகள் நடைபெறவில்லை.

> **2025 நவம்பர் மாதம் 26-ஆம் தேதி நடைபெற்ற விழாவில் திறந்து வைத்து, பொல்லான் அவர்களின் திருவுருவப் படத்துக்கு மலர்தூவி மரியாதை செய்தார் முதலமைச்சர்.**

இந்த நிலையில், ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர். நீண்ட நாட்களாக வைக்கப்பட்டு வந்த கோரிக்கைக்கு, செவிசாய்த்த நம் முதலமைச்சர் அவர்கள், 'மாவீரன் பொல்லான் அவர்களின் வரலாற்றை மீட்டெடுக்க, அரங்கம் அமைக்கப்படும்' என அறிவித்தார்.

அதன்படி, ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், வடுகபட்டி கிராமம், ஜெயராமபுரத்தில் அரங்கம் அமைப்பதற்கான பணிகள் முடுக்கி விடப்பட்டன. திட்ட மதிப்பீடுகள் ரூ.4 கோடியே 90 லட்சம் என மாற்றி அமைக்கப்பட்டு, திருவுருவச் சிலை மற்றும் அரங்கம் அமைப்பது என முடிவு செய்யப்பட்டது. 2024-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அடிக்கல் நாட்டினார் நம் முதலமைச்சர்.

கட்டடப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டு, 2025 நவம்பர் மாதம் 26-ஆம் தேதி நடைபெற்ற விழாவில் திறந்து வைத்து, பொல்லான் அவர்களின் திருவுருவப் படத்துக்கு மலர்தூவி மரியாதை செய்தார் முதலமைச்சர்.

### வாரிசுகளுக்கு மரியாதை

நிகழ்ச்சியின்போது, பொல்லான் அவர்களின் வாரிசுதாரர்களான வரதராஜன், முருகன், வீரன், பழனிச்சாமி, ராஜன் ஆகியோரையும் மேடையேற்றி பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்தார் நம் முதலமைச்சர். அவர்களுக்கு பூமிதான வாரிய நில விநியோகப் பத்திரங்களையும் வழங்கினார், நம் திராவிட மாடல் நாயகர்.

அந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய முதலமைச்சர் அவர்கள், "தமிழ் மண்ணின் மாவீரரான பொல்லான் அவர்களின் சிலையை திறந்து வைப்பதில் வீர உணர்வு அடைகிறேன். தமிழுக்கான தமிழ் மண்ணுக்கான தங்கள் இன்னுயிரை ஈந்தவர்களை நாம் நமது அடுத்த தலைமுறைக்கு அடையாளப்படுத்த வேண்டும்" என மக்களுக்கும் கோரிக்கை வைத்தார். இன்று மாவீரன் பொல்லான் அவர்களின் வீரம், தியாகம், புகழ் உலகம் முழுவதும் தெரியத் தொடங்கியுள்ளது. அதற்குக் காரணம் சொன்னதைச் செய்த கழகத் தலைவரின் வாக்குறுதி என்றால் மிகையில்லை.

**...சாதனை தொடரும்**

## கல்வியில் சிறந்த தமிழ்நாடு!

கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்பதை, இந்தியாவின் புகழ்பெற்ற, இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தை (Indian Maritime University) விசாகப்பட்டினத்தில் கண்டு ஆச்சரியமாகி விட்டேன் எனப் பதிவிட்டுள்ளார் சதீஷ் செல்லதுரை என்பவர்.

"வைசாக் ஐ.எம்.யூ. (Vizag IMU) கேம்பஸ்ல பையனுக்கு சீட் கிடைத்து ஹாஸ்டலில் விடறப்ப பார்த்தா, ஆறேழு பசங்க தமிழ்ல பேசிக்கிட்டிருந்தாங்க. 'எப்டிப்பா இங்கே வந்தீங்க'னு விசாரிச்சா, அவ்ளோ பேரும் அரசுப்பள்ளி மாணவர்கள். கிட்டத்தட்ட 27 தமிழ் பசங்களில் மூன்றில் ஒரு பங்கு பசங்க, அரசுப்பள்ளி மாணவர்கள். உழவடித்த தந்தைகளின், துப்புரவு செய்த தாய்மார்களின் பிள்ளைகள் கப்பல் கட்டவும் கப்பல் ஓட்டும் கேப்டனாகவும் நம் மாநில அரசின் செலவில், படிக்க சேர்ந்துள்ளனர் என்பதை நினைத்தாலே சிலிர்க்குது. இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தை, அரசு நடத்தினாலும் வருடத்துக்குக் கட்டணம் 3 லட்சம் ரூபாய். நம் வர்க்கத்துக்கு எட்டாத கோர்ஸ் என்பது மட்டுமல்ல, அதன் நுழைவுத்தேர்வு குறித்த விவரம் தெரியாத சூழலில் "பீஸ்லாம் எப்டிப்பா பே பண்றிங்க? கல்விக்கடன்லாம் அப்ளை செய்துட்டீங்களா" என்று கேட்டால், "அதெல்லாம் நம்ம தமிழ்நாடு அரசே கட்டிடும்னு" சொன்னாங்க பாருங்க... 'ஜஸ்ட் படி அவ்ளோதான் மிச்சத்த நான் பார்த்துக்கிறேன்னு' அரசு சொல்லுது.

மற்ற ஸ்டேட் பசங்கல்லாம் குறிப்பா, நார்த் பசங்க 'நான் முதல்வன்' திட்டத்தோட விவரமெல்லாம் பார்த்து, வாய பிளக்குறாங்களாம். அரசுப் பள்ளி ஹாஸ்டல், IMU ஹாஸ்டலை விட, தரமானதாக இருக்கும்னு சொல்றாங்க.

அதெல்லாம்விட முக்கியமானது ஷிப் (SHIP) பில்டிங் கோர்ஸ்ல எதிர்காலத் திட்டம் என்னனு வகுப்பில் கேட்டபோது, ஒரு உத்தரப்பிரதேச மாணவன் 'பாகிஸ்தானை அழிக்கறதுக்கு ஒரு கப்பல் தயாரிப்பேன்'னு சொல்றான். நம்ம பசங்க, 'கப்பல் கட்டி அனைத்து மக்களையும் காப்பாத்தணும்'னு கமென்ட் அடிச்சிருக்காங்க.

வித்தியாசம் புரிகிறதா, நம்ம கல்விக்கும் உ.பி. கல்விக்கும்? ஐ.எம்.யூ. (IMU) மட்டுமல்லாமல், பல்வேறு தேசிய அளவிலான கோர்ஸ்களின் நுழைவுத்தேர்வுக் கதவுகளை அடிச்சு நொறுக்கி, நம்ம பசங்க உள்ளே போயிருக்காங்கனா, அதற்குக் காரணம், நான் முதல்வன் திட்டம்" என சிலாகித்து எழுதியிருக்கிறார் அவர்.

## ஃப்ளாஷ்பேக்



து.கோவிந்தசாமி



### 94 வயதிலும் கழகமே என் இயக்கம்!

2005-ஆம் ஆண்டு, எனது 75-வது பிறந்த நாளின்போது தானைத் தலைவரிடம் வாழ்த்து பெறுவதற்காக எனது குடும்பத்தினருடன் கோபாலபுரம் இல்லம் சென்றிருந்தேன். என் துணைவியார் கோமளா, மகன்கள் தங்கமணி, சுந்தரமூர்த்தி, மகள் வசந்தி, மருமகள் தனம், பெயர்த்தி இலக்கியா, பழனி ஆகியோர் என்னுடன் வந்திருந்து தலைவரைக் கண்டு வாழ்த்து பெற்றனர். மகிழ்வுடன் திரும்பினோம். இன்று 94 வயதிலும் தலைவர் கலைஞர் என்கிற கழக உணர்வுதான், என் மகிழ்ச்சி. என் இயக்கம்!

– து.கோவிந்தசாமி,
பெரம்பூர், சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நினைவுகூருக: சென்னை மாநகராட்சி தேர்தல்!

1959-ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநகராட்சி மன்றத் தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்று, நகர மக்களின் நலனை நன்கு கவனித்து நற்பெயருடன் விளங்கியது. 1964 தேர்தலிலும் தி.மு.கழகமே மீண்டும் கைப்பற்றியது. 99 வட்டங்களில் தேர்தல் நடைபெற்றது. தி.மு.க. 83 இடங்களில் போட்டியிட்டு 49 இடங்களைக் கைப்பற்றியது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131